பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 31 வியாழக்கிழமை 20.10.2022 கதிர் 236

நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்க

## இரட்டைப் பிரஜாவுரிமை தடை ‘22’ திருத்தத்தில் உள்ளடக்கம்

இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவி வகிக்க முடியாது என்ற விடயம் அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, நாடாளுமன்றத்தில் 8

இரட்டைப் பிரஜாவுரிமை தடை என்ற சரத்து நீக்கப்படக்கூடாது

# சில நிபந்தனைகளின் அடிப்படையில் 22 இற்குச் சஜித் அணியினர் ஆதரவு



நாடாளுமன்றத்தில் இன்று அறிவிப்பு

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகுவதற்கு இரட்டைப் பிரஜாவுரிமை தடை என்ற சரத்து நீக்கப்படுமானால் அதற்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 2

## புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் நிதியைப் பெற ரணில் நாடகம்

முன்னாள் எம்.பி. அரியநேத்திரன் குற்றச்சாட்டு



தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக 1946ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரையிலும் பல்வேறுபட்ட குழுக்கள் அமைக்கப்பட்டு பல்வேறுபட்ட ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டு பல்வேறுபட்ட சர்வதேச மற்றும் உள்ளூர் ரீதியான பேச்சுகளும் இடம்பெற்றன. இந்தநிலையில், தமிழ் மக்களுக்கு என்ன கொடுக்கப்பட வேண்டும் என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரிந்த விடயம்.

ஆனால், காலத்தை நீடித்து புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் நிதியைக் கொண்டு வருவதற்கான ஒரு நாடகமாகத் தமிழ் மக்களின் பிரச் சினைகளுக்குத் தீர்வு காணுதல் என்ற பெயரில் ரணில் தலைமையில் 8

## மட்டக்களப்பில் காணிகள் வழங்கி ஊடகர்களின் வாய்கள் அடைப்பு

பிள்ளையான் இப்படிக் குற்றச்சாட்டு



மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 ஆயிரம் ஏக்கர் வரையிலான அரச காணிகள் அதிகாரிகளால் மோசடியான வகையில் விற்கப்பட்டுள்ளன என்றும், இது தொடர்பான விடயங்கள் தமிழ் ஊடகங்களில் 2

## கிளிநொச்சியில் 9,971 குடும்பங்கள் உணவுப் பற்றாக்குறையால் பாதிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் 9 ஆயிரத்து 971 குடும்பங்கள் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் 8




## தீபாவளி முற்பணம் இல்லை; தொழிலாளர்கள் ஏமாற்றம்!

அக்கரப்பத்தனையில் வெடித்தது போராட்டம்



தீபாவளி முற்பணமாக ரூபா 15 ஆயிரம் தருவதாகப் பெருந்தோட்ட கம்பனிகள் அறிவித்திருந்த போதிலும் அக்கரப்பத்தனை பெருந்தோட்டக் கம்பனிக்கு உட்பட்ட அக்கரப் பத்தனை, வேவர்லி, மோனிங்டன், போட்மோர், ஆடலி உள்ளிட்ட தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களுக்கு 5 8

## அதிரடியாக வென்றது இலங்கை; போராடித் தோற்றது நெதர்லாந்து




ரி - 20 உலகக் கிண்ணத் தொடரில் நெதர்லாந்து அணிக்கு எதிரான இன்றைய போட்டியில் இலங்கை அணி 16 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சுப்பர் - 12 சுற்றுக்குள் நுழையும் எதிர்பார்ப்புடன் களமிறங்கிய இலங்கை அணி, நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது.

5 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக குசல் மெண்டில் 79 ஓட்டங்களளப் பெற்றார். அசலங்க 31 ஓட்டங்களைப் பெற்றார். பின்னர் 163 என்ற வெற்றி இலக்கை 2

## யாழில் ஹெரோயினுடன் 3 இளைஞர்கள் சிக்கினர்

யாழ்ப்பாணம், மல்லாகம் பகுதியில் மூன்று இளைஞர்கள் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நல்லூர் மற்றும் கொக்குவில் பகுதிகளைச் சேர்ந்த 32 , 23 மற்றும் 25 வயதுடைய மூவரும் 50, 60 மற்றும் 65 மில்லி கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மூவ ரும் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக் கப்பட்டு மேலதிக விசார ணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

## தமிழக மீனவர்கள் மூவர் சிறை பிடிப்பு

சட்டவிரோதமான முறையில் எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், காரைநகர் கடற்பரப்பில் நேற்றிரவு மீன் பிடித்துக்கொண்டிருந்த வேளையிலையே கடற்படையினர் கைது செய்துள்ளனர். 2

## முதலைக்கு இரையான மூதாட்டி



கதிர்காமம் - செல்லகதிர்காமம் பகுதியிலுள்ள மாணிக்க கங்கையின் மேல் பகுதியில் நீராடச் சென்ற பெண் ஒருவர் முதலைக்கு இரையாகி உயிரிழந்துள்ளார். 2

## சில நிபந்தகைளின்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் இன்று ஆரம்பமான 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் ஆராய்ந்த விதத்தில் ஒப்பீட்டளவில் 20 ஆவது திருத்தத்தை விட 22 இல் சில நல்ல விடயங்கள் உள்ளன. இதில் சில மாற்றங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

எனவே, 22 ஆவது திருத்தம் தொடர்பில் மிகவும் நேர்மையாகச் செயற்படுவதாயின் இந்தத் திருத்தத்துக்கு நாம் சில நிபந்தனைகள் அடிப்படையில் ஆதரவளிக்கத் தயாராகவுள்ளோம்.

அரசமைப்பு பேரவைக்கான உறுப்பினர்கள் நியமனத்தின்போது, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவரின் இணத்துக்கமைய தெரிவு இடம் பெறவேண்டும்.

அத்துடன், எம்.பியாகுவதற்கு இரட்டைப் பிரஜாவுரிமை தடை தொடர்பில் 22 ஆவது திருத்தச் சட்டமூல வரைவில் உள்ள சரத்தில் ஒரு துளியேனும் மாற்றம் ஏற்படக்கூடாது என்பதை நாம் வலியுறுத்துகின்றோம். இதில் சிலரின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப திருத்தங்களைக் கொண்டுவர முயற்சித்தால் நாம் அதனைக் கடுமையாக எதிர்ப்போம்.

இரண்டரை வருடங்களில் நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு என்று இந்தச் சட்டமூல வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் எந்த மாற்றமும் ஏற்படக்கூடாது. அது அவ்வாறே இருந்தால் நாம் ஆதரவு வழங்குவோம்.

அத்துடன், ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையையும் நாம் முன்வைக்கின்றோம்.

இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் 22 ஆவது திருத்தத்தை நாம் ஆதரவளிக்கத் தயாராக உள்ளோம். எனவே, நாட்டை மேலும் வங்குரோத்து நிலைக்குத் தள்ள நாம் ஆதரவு வழங்கத் தயாரில்லை.

எக்காரணத்தைக் கொண்டும், இதில் மாற்றங்களைஏற்படுத்தவரவேண்டாம். அந்தவகையில், மிகவும் நேர்மையாக, எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய மக்கள் சக்தி தமது ஆதரவை வழங்கும். எனினும், ஆளுங்கட்சிக்குள் இதற்குள் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படுமா என்பதில் சந்தேகம் நிலவுகின்றது - என்றார்.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரையும் விடுவிக்குமாறும் எதிர்க்கட்சி தலைவர் அரசிடம் இன்று கோரிக்கை விடுத்தார்.

## இரட்டைப்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் 2 ஆம் மதிப்பீட்டை சபையில் இன்று சமர்ப்பித்து உரையாற்றும் போதே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

## தமிழக..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதான மீனவர்களையும் அவர்களின் படகையும் மேலதிக நடவடிக்கைக்காகக் கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தக் கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## முதலைக்கு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லக்திர்காமம் - கொஹொம்பதிகான பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய பெண்ணேஇவ்வாறுஉயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் மாணிக்க கங்கையில் நீராடச் சென்றிருந்த நிலையில், முதலையால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

கடினமான பிரயத்தனத்திற்கு பின்னர் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அதிரடியாக..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. இதன்படி இலங்கை அணி 16 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

## மட்டக்களப்பில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவராமைக்கு அங்குள்ள ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் 10 பேர்சர்ஸ் காணிகள் வழங்கப்பட்டு அவர்களின் வாய்கள் அடைக்கப்பட்டுள்ளமையே காரணம் என்றும் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நீதி அமைச்சின் 5 திருத்தச் சட்டங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதன்போது இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் மேலும் கூறுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க காலத்தில் கொண்டு வரப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழு ஊடாக 7 ஆயிரம் அல்லது 9 ஆயிரம் ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டன. அந்தக் காணிகளில் மோசடிகள் இடம் பெற்றுள்ளன.

கடந்த 16 ஆம் திகதி தென்பகுதி சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. மட்டக்களப்பில் அதிகாரிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை கொள்ளையடித்த விற்றுள்ளனர் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனை ஏன் தமிழ் ஊடகங்கள் வெளியிடவில்லை என்று தேடிப் பார்த்த போது, அங்குள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவின்பதில்பணிப்பாளராக இருப்பவர், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் 10 பேர்சர்ஸ் காணிகளை வழங்கிஅவர்களின்வாயைஅடைத்துள்ளார். இதன் காரணத்தால் கொழும்பில் உள்ள தமிழ் தெரியாத ஊடகவியலாளர்களே மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரச்சினைகளை எழுதும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஏறாவூர்பற்று அதாவது செங்கலடி பிரதேசத்தில்தான் அதிகளவில் காணிகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. காணி பதிவில் சிக்கல் வந்தால் அந்தக் காணி தனியாருக்கு சொந்தமானதா? அரச காணியா? என்று ஆராயும் போது அதனைத் தனியார் காணி என்று எழுதுவதற்காகப் பல கோடி கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடித்துள்ளனர். 2 ஆயிரம் ஏக்கர் வரையிலான காணிகள் மோசடியான வகையில் துண்டு துண்டுகளாக விற்கப்பட்டுள்ளன.

இதில் கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டல் உரிமையாளர்களும் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளை கொள்வனவு செய்துள்ளனர். அந்த மாவட்டத்தின் அரசியல் பிரமுகவராக நான் கவலையடைகின்றேன்.

தொழில் முயற்சியாளர்கள், ஏழைகளுக்கு சிறிய அரச காணியை எடுப்பதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் ஊடகங்கள் கூறினாலும் நாடாளுமன்றத்தில் பேசினாலும் தீர்க்கப்படாது உள்ளது.

இலஞ்ச, ஊழல் ஒழிக்கப்பட வேண்டும். ஐ.நாவிலும் இந்த விடயம் கோடிட்டு காட்டப்படுகின்றன. இந்நிலையில், இந்த விடயம் தொடர்பில் அரசு விசாரணைகளை நடத்தி மோசடியான காணிகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்து மக்களுக்குப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆசிரியப் பல்கலைக்கழகம்

இலவசக் கல்விமுறை நீடிக்கும் இலங்கையில் எழுதப்படாத சட்டம் ஒன்று இருக்கின்றது.

இலவச கல்வி மூலம் பாடசாலை கல்வி முடித்து, பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களுக்கு பல்வேறு புலமைப் பரிசில் நிதியங்கள், மானியங்கள் வாயிலாக அவர்களின் பட்டப் படிப்புக்கு அரசே முன்னின்று உதவுகின்றது.

இப்படி பட்டம் பெற்று வருடாந்தம் சமூகத்துக்குள் விடப்படும் பல்லாயிரக் கணக்கான பட்டதாரிகள் அனைவருக்கும் அரசே வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற எழுதப்படாத சட்டம்தான் அது.

அப்படி வழங்கவிட்டால் அதற்கு எதிராக அவ்வப்போது போராட்டங்கள் வேறு தாராளமாக நடக்கும். அதுவே பெரும் அரசியல் பிரச்சினையாகவும் மாறும்.

இப்படி ஆயிரக்கணக்கில் சேரும் பட்டதாரிகளை அரச நியமனம் என்று கொண்டு வந்து கொட்டிக் குவிக்கும் மையங்களில் ஒன்று பாடசாலைகள். ஆசிரியர் நியமனம் என்ற பெயரில் பட்டதாரிகள் ஒரு தொகுதியினரின் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவது குறித்து சிந்திக்கப்படுகின்றது. ஆனால், அதனால் கல்வித் துறைக்கு ஏற்படும் பேரழிவு குறித்து அரசியல்வாதிகள் பலரும் சிந்திப்பதில்லை. இத்தனை ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தினோம் என்பதுதான் அவர்களின் பிரச்சினை.

இத்தகைய எழுந்தமானமான ஆசிரியை நியமனங்களை அடுத்துத்தான் கல்வி நிலைமை மோசமாக பாதிக்கப்படுகின்றது என்பது கண்டறியப்பட்டது. அதை அடுத்து இந்தப் பிரச்சினையை ஓரளவு நிவர்த்திப்பதற்காக ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்படுபவர்களுக்கு கற்றல் – கற்பித்தல் முறைமைகளில் வாண்மையும் திறமையும் ஏற்படுத்தும் நோக்கில் ஆசிரியர் பயிற்சி கலாசாலைகள், கல்விக் கல்லூரிகள் முறைமை நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

ஆசிரியத்துவத்துக்கான கல்வி நெறிப் போதனைகள், போதிய பயிற்சிகள் போன்றவற்றின் பின்னர் ஆசிரிய வாண்மையுடன் பாடசாலைகளுக்குப் புதிய ஆசிரியர்களை அனுப்புவதில் இத்திட்டம் ஓரளவு பலன் அளித்து வருகிறது.

அதனை மேலும் மேம்படுத்துவதற்கான யோசனை ஒன்றை கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பிரேரித்திருக்கின்றார்.

ஆசிரியர்களை உருவாக்கும் வகையில் தேசிய அளவிலான பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

அதாவது, ஆசிரியர் பயிற்சி கலாசாலைகள், கல்வி கல்லூரிகள் என்ற நிலைமையைத் தாண்டி ஆசிரியர்களுக்கான பல்கலைக்கழகம் என்ற கருத்தியலை அவர் பிரஸ்தாபிக்கின்றார்.

கல்விக் கல்லூரிகளைப் பல்கலைக்கழக மட்டத்துக்கு கொண்டு வருவதற்கான பல கோரிக்கைகள் தம்மிடம் இருக்கின்றன என்றும் இது குறித்த பூர்வாங்கக் கலந்துரையாடல் நிறைவடைந்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர் தொழிலுக்கான தேசிய அளவிலான பல்கலைக்கழகங்களை அமைக்கவுள்ளார் எனத் தெரிவித்த அமைச்சர், அது நிறுவப்பட்டதும் பாடங்களின் வகைக்கு ஏற்ப பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றும் கூறினார்.

நல்ல திட்டம். நடைமுறைக்கு வந்தால் சிறப்பு.

# பேராசிரியர் சி. பத்மநாதனின் 3 ஆய்வு நூல்கள் வெளியீடு!




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் தகைசார், வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி. பத்மநாதன் எழுதிய திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் பற்றிய மூன்று ஆய்வு நூல்களின் வெளியீட்டு விழா நேற்று (புதன்கிழமை) யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத்துறை ஏற்பாட்டில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவில், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்துறை முன்னாள் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, வரலாற்றுத்துறை முன்னாள் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

தொடர்ந்து நூலாசிரியர் சி.பத்மநாதன் இந்து கற்கைகள் பீடத்தினரால் மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

# நாட்டில் வாழ்கின்ற 50 வீதமான குடும்பங்கள் உணவில் இறைச்சி, மீன்களை கைவிட்டுள்ளன!



இலங்கையிலுள்ள அதிகளவான குடும்பங்கள் தமது உணவிலிருந்து இறைச்சி வகைகளை குறைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை செஞ்சிலுவை சங்கம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஆகியன முன்னெடுத்திருந்த ஆய்வின் நிறைவிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இலங்கை சுதந்திரத்தின் பின்னர் பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள நிலையில், நோயாளர்களும் குறைந்தளவிலான மருந்துகளையே பயன்படுத்தி வருகின்றமையும் அந்த ஆய்வின் ஊடாக தெரியவந்துள்ளது.

டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி 2022 ஆம் ஆண்டு 200 ரூபாவிலிருந்து 360 ரூபாவாக வீழ்ச்சியடைந்த நிலையில் உணவுப் பொருள்களின் விலை 50 வீதத்தாலும், ஏனைய பொருள்களின் விலை 70 வீதத்தாலும் உயர்ந்துள்ளன.

இந்த நிலையில் 50 வீதமான குடும்பங்கள் தமது உணவில் இறைச்சி மற்றும் மீன்களை கைவிட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், 11 வீதமானோர் புரத உணவை முற்றிலும் தவிர்த்துள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது. இதில் பெருந்தோட்ட துறையினர் முழுமையான பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளதுடன், கடற்றொழில் சமூகமும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

# திலினி பிரியமாலிக்கு விளக்கமறியல் நீடிப்பு



நிதி மோசடி தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்ட திலினி பிரியமாலியை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கோட்டை நீதிவான் நீதிமன்றில் ஸ்கைப் தொழில்நுட்பத்தின் ஊடாக நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற விசாரணைகளின்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அவரை எதிர்வரும் நவம்பர் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உலக வர்த்தக மையத்தில் இயங்கி வரும் நிதி நிறுவனத்தில் பல பாரிய நிதி மோசடிகளில் ஈடுபட்டதாக திலினி பிரியமாலி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும் வர்த்தகர்கள் மற்றும் உயரதிகாரிகளிடம் இருந்தும் பணத்தை மோசடி செய்தார் எனவும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மியான்மர் சிறையில் குண்டு வெடிப்பு எட்டுப் பேர் பலி; 10 பேருக்குக் காயம்






நேபிடாவ், ஒக்.20

மியான்மர் சிறையில் குண்டு வெடித்ததில் எட்டுப்பேர் பலியாகியுள்ளனர்.

மியான்மரின் 2 ஆவது மிகப்பெரிய நகரமான யாங்கூனில் அந்த நாட்டின் மிகப்பெரிய சிறைச்சாலை உள்ளது. நூற்றாண்டு பழமையான இந்த சிறையில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் அடைத்து வைக் கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் அரசியல் கைதிகள். இந்தச் சிறையில் மிகவும் கடுமை யான கட்டுப்பாடுகள் இருக்கின்றன எனவும், கைதிகள் மனிதாபிமான மற்ற முறையில் நடத்தப்படுகின்றனர் எனவும் பரவலாகக் குற்றச்சாட்டு உள்ளது.

நேற்றுக் காலை இந்த சிறையில் சில கைதிகளை பார்க்க அவர்களது உறவினர்கள் வந்திருந்தனர். அவர்கள் சிறையின் தபால் அறையில் காத்திருந்தனர். அப்போது தபாலில் வந்திருந்த 2 பார்சல்களை அங்கிருந்த சிறை ஊழியர்கள் பிரித்தபோது அந்த பார் சல்களில் இருந்த வெடிகுண்டுகள் பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறின. இதில் அந்த பகுதியே அதிர்ந்தது.


சிறையில் குண்டு வெடித்ததால் கைதிகள் மற்றும் சிறை ஊழியர்கள் மத்தியில் பெரும் பதற்றம் உருவானது. இந்த குண்டு வெடிப்பில் சிறை ஊழியர்கள் 3 போ மற்றும் கைதிகளை பார்க்க வந்திருந்த பார்வையாளர்கள் 5 பேர் என 8 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பலியாகினர். மேலும் 10 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

இதனிடையே சிறையில் குண்டு வெடித்தது குறித்து தகவல் கிடைத்ததும் ராணுவ வீரர்கள் உடனடியாக அங்கு விரைந்து சிறை முழுவதையும் சுற்றிவளைத்து தங்களின் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வந்தனர். பின்னர் அவர்கள் படுகாயம் அடைந்த நபர்களை மீட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள வைத்தி யசாலைகளுக்கு அனுப்பி வைத்தனர்.

மியான்மரில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கவிழ்த்துவிட்டு இராணுவம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதற்கு எதிராக அங்கு பல்வேறு கிளர்ச்சிப் படைகள் உருவாகி இருக்கின்றமையுடன், அவர்கள் இராணுவத்துக்கு எதிராக அவ்வப்போது பல தாக்குதல் களை நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. இந்தக் குண்டு வெடிப்புக்கு உடனடியாக எந்தவொரு அமைப் பும் பொறுப்பேற்கவில்லை..

## உக்ரைன் பிராந்தியங்களில் ரஷ்யாவின் இராணுவச் சட்டம்

### அமுல்படுத்துகின்றார் புடின்



மொஸ்கோ,ஒக்20

தமது கட்டுப்பாடுகளுக்குள் கொண்டு வந்த உக்ரைனின் பிராந்தியங்களில் ரஷ்யா தனது இராணுவச் சட்டத்தை அமுல்படுத்தியிருப்பதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சிறப்பு இராணுவ நடவடிக்கை என கூறி உக்ரைன் மீது ரஷ்யா போரைத் தொடங்கி 8 மாதங்கள் ஆகின்ற நிலையில், போர் முடிவில்லாமல் நீண்டு கொண்டு செல்கின்றது. இந்த போரில் உக்ரைனிடம் இருந்து ஆக்கிரமித்த லுஹான்ஸ்க், டோனெட்ஸ்க், கெர்சன், ஜபோரிஜியா ஆகிய 4 பிராந்தியங்களை அண்மையில் ரஷ்யா தன்னுடன் இணைத்துக்கொண்டது. இது சர்வதேச சட்டத்தை மீறும் செயல் என உலக நாடுகள் கண்டனம் தெரிவித்தன.

இதையடுத்து, சட்டவிரோதமாக இணைக்கப்பட்ட அந்த 4 பிராந்தியங்களையும் ரஷ்யாவிடம் இருந்து மீட்டெடுக்க உக்ரைன் ராணுவம் கடுமையாகப் போராடி வருகிறது. இந்த நிலையில் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்ட உக்ரைனின் 4 பிராந்தியங்களிலும் ரஷ்ய அதிபர் புடின் ராணுவ சட்டத்தை அமுல்படுத்தி உள்ளார். ராணுவ சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து

புடின் குறிப்பிடவில்லை. இந்த உத்தரவு இன்று (வியாழக்கிழமை) முதல் அமுலுக்கு வருவதாக தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 1,600 ஆண்டுகள் பழமை மிகுந்த மொசைக் கட்டுமானம் சிரியாவில்!

### ரோமானியர்கள் காலத்தைச் சேர்ந்ததுதான்



டமாஸ்கஸ், ஒக்.20

மத்திய கிழக்கு நாடான சிரியாவில் ரோமானியர்கள் காலத்தைச் சேர்ந்த மொசைக் கற்கள் கொண்ட கட்டுமா னத்தை தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

சுமார் 1,600 ஆண்டுகள் பழமை யான இந்த கட்டுமான அமைப்பு 20 மீட்டர் நீளமும், 6 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இந்த மொசைக் கற்களில் மேற்கு அனடோலியாவில் நடந்த ட்ரோஜன் போரின் சித்திரிப்புகள் மற்றும் கிரேக்க புராண கதைகளில் வரும் கதாபாத்திரங்களின் உருவங் கள் தீட்டப்பட்டுள்ளன.

இந்த மொசைக் கட்டடம் ஒரு கோட்டையாக இருந்திருக்கலாம் என தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்த மொசைக் கட்டுமானத்தின் முழு அமைப்பு இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும், அகழாய்வுகள் தொடர்ந்து!நடைபெற்று வருகின்றன எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். தற்போதுப்அகழாய்வு நடைபெற்று வரும் பகுதியை கடந்த 2018 ஆம் ஆண்டு சிரிய அரசு கைப்பற்றிய பிறகு, அங்கு அகழாய்வு பணிகள் தொடங்கப்பட்டமௌ குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸை அடுத்து துனிசியாவிலும் எரிபொருள் நெருக்கடி ஆரம்பித்தது

### பல வாரங்களுக்கு நீடிக்குமாம்

வடக்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான துனிசியாவில் கடந்த சில மாதங்களாக பொரு ளாதாரம் கடுமையான வீழ்ச்சியை சந்தித்து வரு கின்ற நிலையில், இதனைச் சமாளிக்க அந்நாட்டு அரசு சர்வதேச நாணய நிதியத்திடம் சுமார் 2 பில்லியன் டொலர்கள் கடன் உதவி கோரியுள் ளது.

இதனிடையே ரஷ்யா - உக்ரைன் இடை யிலான போர் காரணமாக எரிபொருள் இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ளதால், துனிசியாவில் கடும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அந்நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஒரு வாரத்திற்குத் தேவையான எரிபொருள் மட்டுமே கையிருப்பு உள்ளதாக அந்நாட்டின் தொழிலாளர் சங்கம் அறிவித்துள் ளது. அங்கு சுமார் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட வாகன ஓட்டிகள் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தலைநகர் துனிஸில் உள்ள எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் நிரப்புவதற்காக வாகனங்கள் நீண்ட வரிசைகளில் அணிவகுத்து நிற்கின்றன.

இதனிடையே துனிசியாவில் மொத்த எண் ணெய் தேவையில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதாகவும், தி னசரி 35 ஆயிரம் பரல்கள் மட்டுமே எண்ணெய் உற்பத்தி நடைபெறுவதாகவும் தரவுகள் தெரி விக்கின்றன. ஆனால் அங்கு தினசரி நுகர்வுக்கு 90 ஆயிரம் பரல்கள் எண்ணெய் தேவைப்படும் நிலையில், எரிபொருள் இறக்குமதிக்கு தேவை யான நிதி ஒதுக்கீட்டை அரசு செய்யவில்லை என்றால் துனிசியாவில் எரிபொருள் விநியோக தட்டுப்பாடு பல வாரங்களுக்கு நீடிக்கும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

# காங்கிரஸின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே!






புதுடெல்லி, ஒக்.20

இந்தியாவில் காங்கிரஸ் கட்சியின் தலைவராக மல்லிகார்ஜுன கார்கே பெரு வெற்றியீட்டினார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்விஅடைந்ததால், காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து ராகுல்காந்தி விலகினார்.

இடைக்காலத் தலைவராக சோனியாகாந்தி பொறுப்பேற்றார். இதைத்தொடர்ந்து, கட்சிக்கு முழுநேர தலைவரை தேர்ந்தெடுக்க கடந்த 17 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது. கட்சியின் மூத்த பிரமுகர் மல்லிகார்ஜுன கார்கேவும், சசிதரூரும் போட்டியிட்டனர். நாடு முழுவதும் 68 இடங்களில் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு இருந்தன. 9 ஆயிரத்து 915 மாநில காங்கிரஸ் கமிட்டி பிரதிநிதிகள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். அவர்களில் 9 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர்வாக்களித்தனர்.

இந்த நிலையில், தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்றையதினம் எண்ணப்பட்ட நிலையில் இதில் 7 ஆயிரத்து 897 வாக்குகள் பெற்று மல்லிகார்ஜுன கார்கே அபார வெற்றி பெற்றார்.

அவரை எதிர்த்து போட்டியிட்ட சசிதரூர் 1072 வாக்குகள் பெற்று தேல்வியடைந்தார். 416 வாக்குகள் செல்லாதவை என அறிவிக்கப்பட்டன. தேர்தலில் மல்லிகார்ஜுன கார்கே வெற்றிபெற்றதை அடுத்து காங்கிரஸ் வரலாற்றில் 24 ஆண்டுகளுக்கு பிறகு நேரு குடும்பத்தை சாராத ஒருவர் காங்கிரஸ் தலைவராகின்றார்.

## உரத் தொழிற்சாலையில் வெடி விபத்து: மும்பையில் மூன்று பேர் உயிரிழப்பு!!



மும்பை, ஒக்.20

மராட்டிய தலைநகர் மும்பையில் இருந்து 100 கி.மீ. தொலைவில் ராய்காட் மாவட்டம் அலிபாக்கில் உள்ள தால் என்ற இடத்தில் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான தேசிய ரசாயன மற்றும் உர தொழிற்சாலை உள்ள தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தொழிற்சாலையை சேர்ந்த ஒரு குழுவினர் அங்குள்ள ஏ.சியை(குளிரூட்டியை) சரிசெய்யும் பணியில் ஈடுபட்டு கொண்டு இருந்த போது திடீரென அங்கிருந்த ஏ.சி. 'கொம்பிரர்' வெடித்து சிதறியது. இதில் சரிசெய்யும் பணியில் இருந்த6 தொழிலாளர்கள் தூக்கி வீசப்பட்டனர். இதில் 3 பேர் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து இறந்துபோனார்கள். மற்ற 3 பேரும் படுகாயத்துடன் உயிருக்குப் போராடிக்கொண்டு இருந்தனர்.




## நகர்ப்புற அபிவிருத்திக்கு நான்காயிரம் கோடி ரூபா

புதுடெல்லி, ஒக்.20

பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட நகரங்களில் ஒருங்கிணைப்பு பணிகளுக்காக மத்திய நிதி அமைச்சகத்தின் செலவினத்துறை மானியம் வழங்கி வருகின்றது. இந்த வகையில் 2022-2023-ம் ஆண்டுக்காக ரூ.4,761.80 கோடி வழங்கப்பட்டு உள்ளது. இதில் தமிழகத்துக்கு இதுவரை ரூ.14.70 கோடி கிடைத்து இருக்கிறது.

இந்த நிலையில் தற்போது ஆந்திரா, உத்தரபிரதேசம், சத்தீஷ்கார் மற்றும் மராட்டியம் ஆகிய 4 மாநிலங்களுக்கு ரூ.1,764 கோடி வழங்கப்பட்டு உள்ளது.

## தாலியையும் கழற்றினாலேயே பரீட்சை எழுதுவதற்கு அனுமதி

ஐதராபாத், ஒக்.20

தெலங்கானா மாநிலம் அடிலாபாத் மாவட்டத்தில் வித்யார்த்தி ஜூனியர் கல்லூரி செயல்பட்டு வருகின்ற நிலையில், தெலங்கானா அரசுத் தேர்வு வாரியம் (டிஎஸ்பிஎஸ்சி) நடத்தும் குரூப் 1 தேர்வுக்கு இந்தக் கல்லூரியும் ஒரு தேர்வு மையமாக இருந்தது. இங்கு நூற்றுக்கணக்கான தேர்வர்கள் நேற்று காலைவந்தனர். அப்போது தேர்வறைகளுக்கு வெளியே இருந்த பொலிஸ் அதிகாரிகள், அங்கு வந்த பெண்களிடம் அவர்கள் அணிந்திருந்த நெக்லஸ்கள், வளையல்கள் ஆகியவற்றைக் கழற்றி வைத்துவிட்டு தேர்வறைக்கு உள்ளே செல்லுமாறு அறிவுறுத்தினர். அதன்படி, அனைத்தையும் கழற்றி வைத்த பெண்கள் தாலியை மட்டும் கழற்றாமல் இருந்தனர்.

ஆனால், தாலியையும் கழற்றி வைத்தால்தான் தேர்வு எழுத அனுமதி வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் கடும் அதிர்ச்சியடைந்த பெண்கள், வேறு வழியின்றி தங்கள் தாலிகளை கழற்றி வைத்துவிட்டு தேர்வு எழுதினர். இது அங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



## புதிய பாதுகாப்புச் செயலாளர்



புதுடெல்லி, ஒக்.20

இந்தியாவின் அடுத்த பாதுகாப்பு துறை செயலாளராக அரமனே கிரிதர் நியமிக்கப்பட்டுள்ளார் என மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டு உள்ளது. இது பற்றிய செய்தியில், மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் செயலாளராக உள்ள அரமனே கிரிதர், நாட்டின் அடுத்த பாதுகாப்பு துறை செயலாளராக நியமனம் செய்யப்படுகிறார்.

நாட்டின் பாதுகாப்பு துறை செயலாளராக தற்போது உள்ள அஜய் குமார் பதவி காலம் இந்த ஆண்டு ஒக்டோபர் 31ந்திகதியுடன் நிறைவடைகிறது.



## மும்பையில் வெடிகுண்டு மிரட்டல்!

மும்பை, ஒக்.20

மராட்டியத்தின் மும்பை நகரங்களில் மக்கள் அதிகம் கூடக்கூடிய 3 இடங்களில் குண்டு வெடிக்கும் என தொலைபேசி வழியேயான அழைப்பில் மிரட்டல் விடப்பட்டு உள்ளமை அந்தப் பகுதியில் பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த மிரட்டல் விடுத்த நபரை கண்டறியும் பணியில் பாதுகாப்பு முகமைகள் ஈடுபட்டு உள்ளன.

மும்பையில் 2008 ஆம் ஆண்டு நடந்த பயங்கரவாத தாக்குதலில் 166 பேர் கொல்லப்பட்டனர். அதன் நினைவு தினம் இன்னும் ஒரு சில நாள்களில் வரவுள்ள நிலையில் இந்த வெடிகுண்டு மிரட்டல் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பொத்துவில் கனகர் கிராம மக்கள் மீளக் குடியமர முதற்கட்ட அனுமதி

## 76 பேருக்கு காணி விடுவிக்கப்படுகின்றது





(வி.ரி. சகாதேவராஜா)

1990களில் இடம்பெயர்ந்த பொத்துவில் அறுபதாம் கட்டை கனகர் கிராம மக்கள் 32 வருடங்களின் பின் மீள்குடியேற அனுமதி கிடைத்திருக்கின்றது. முதல் கட்டமாக 76 பேருக்கு காணியை விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

இது தொடர்பாக பொத்துவில் பிரதேச செயலாளர் மொகமட் இஸ்மாயில் பிர்னாஸ்ஸை நேற்றுப் புதன் கிழமை காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில், மாணவர் மீட்பு குழுத் தலைவர் செல்வராஜா கணேஷ் ஆகியோர் கனகர் கிராம மக்களுடன் இணைந்து சந்தித்தனர் .

அவர்கள் கடந்த கால போராட்டம் தொடர்பாக எடுத்துரைத்த பொழுது புதிய பிரதேச செயலாளர் பிர்னாஸ் முதற்கட்டமாக 76 பேருக்கு காணியை விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது எனவும், கிழக்கு மாகாண காணி ஆணையாளரின் ஏற்பாட்டிலே இரண்டாம் கட்டமாகவும் காணி விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

இதனை அடுத்து காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் அங்கு கருத்துரைக்கையில் –

கடந்த 32 வருட காலமாக இடம் பெயர்ந்து இந்த மக்கள் நான்கு வருடங்கள் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்கள். இன்று அந்த மக்களுக்கு ஓரளவு விடிவு கிடைத்து இருக்கின்றது. இதுவரை நாங்கள் அந்த மக்களுக்காக மூன்று பிரதேச செயலாளர்கள், 3 அரசாங்க அதிபர்கள் மற்றும் அமைச்சர்களோடுசந்தித்திருக்கின்றோம்.பல்வேறுபட்ட கூட்டங்களிலே தீவிரமாகப் பேசியிருக்கின்றோம். அதன் பயனாக இன்று 76 பேருக்கு முதல் கட்டமாக காணியை விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றமை சந்தோம் அளிக்கின்றது. புதிய பிரதேச செயலாளர் பிர்னாசுக்கு நன்றிகளை கூறுகின்றோம்.

இதுவரையும் நடந்த போராட்டத்தில் 13 பேர் மூப்பு காரணமாக மரணமடைந்திருக்கின்றார்கள். இதில் ஈடுபட்ட சகல மக்கள் நல செயல்பாட்டாளர்களுக்கும் இது தொடர்பாக நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் செய்திகளையும் எழுதிவந்த எமது ஊரின் மூத்த பத்திரிகையாளர் சகாதேவராஜா சேருக்கும் நன்றிகள்.நன்றி கூறுகின்றோம் என்று கூறினார் .

**வரலாறு**

1960களில் சுமார் 278குடும்பங்கள் வாழ்ந்துவந்தன. 1981களில் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் காலத்தில் முன்னாள் எம்.பி. அமரர் எம்.சி.கனகரெத்தினத்தின் முயற்சியால் வீடுகட்ட அரை ஏக்கர் நிலமும், பயிர்செய்ய 2ஏக்கர் நிலமும் தரப்பட்டு 30வீடுகளைக்கட்டி கொடுக்கப்பட்டு அவர்கள் மகிழ்ச்சியாக சேனைப்பயிர்ச்செய்கையுடன் வாழ்ந்த. வந்தனர்.

1990களில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த அவர்களை கடந்த 32வருடங்களாக அங்கு வனபரிபாலனஇலாகா குடியேற அனுமதிக்கவில்லையென்பது பிரதான குற்றசாட்டாகும்.

எது, எப்படியிருந்தபோதிலும் அவர்கள் வாழ்ந்த பிரதேசம் இன்று மிகவும் பயங்கரமான சூரப்பற்றைகளினால் சூழ்ந்து காடுமண்டிக்காணப்படுகின்றது. அந்தக்காட்டினுள் பாழடைந்து இடிந்து தகர்ந்த நிலையில்அவர்களது30வீடுகளும்காணப்படுகின்றன. கூடவே அவர்கள் பாவித்த மலசலகூடங்களும் தகர்ந்தநிலையில் காணப்படுகின்றன. அதாவது அந்த மக்கள்வாழ்ந்ததற்கானதடயங்கள்நிறையவேயுள்ளன.

இதுவரை நாடாளுமன்ற உறுப்பினர் தொடக்கம் பல அரசியல்வாதிகள் சமுகசேவையாளர்கள் எனப்பலரும் வந்து கலந்துரையாடி பல உறுதிமொழிகளைம் அளித்துள்ளார்கள். வனத்துறை உயரதிகாரியும் பிரதேசசெயலாளரும் இக்காணியை மீளளிக்க உறுதி கூறியுள்ள நிலையிலும் போராட்டம் தொடர்ந்தது.

# இறக்காமம் பிரதேச செயலகத்தில் காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வு



(கே.எ.ஹமீட்)

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் மிக நீண்ட காலமாக இருந்து வரும் காணி அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் அவை தொடர்பான பிரச்சினைகளுக்கு பிரதேச செயலாளர் அஷ்யேக் எம்.எஸ்.எம். ரஷானின் (நளீமி) நெறிப்படுத்தலில் துரிதகதியில் உடனடி தீர்வுகள் மற்றும் வழி காட்டல்கள் வழங்கப்பட்டு வருகின் றன.

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிக்குட்பட்ட பிரிவுகளில்நீண்டகாலமாகக் குடியிருந்துவரும் மக்களுக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ், காணி அளிப்புப் பத்திரங்கள் (உறுதி) வழங்கப்பட்டு வருகின்றது.

புதிதாக அளிப்புப் பத்திரங்கள் (உறுதி) கிடைக்கப்பெற்றவர்களுக்கான அளிப்புப் பத்திரம் வழங்கிவைக்கும் நிகழ்வு, பிரதேச செயலாளர் அஷ்யெக் எம்.எஸ்.எம். ரஷான் (நளீமி) அவர்களின் தலைமையில் நேற்று புதன் கிழமை பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நசீல் ,காணி உத்தியோகத்தர் என்.எல்.எம். மாஹிர், காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

# சுயதொழில் முயற்சியாளர்களுக்கான 03 நாள் செயலமர்வு சாய்ந்தமருதில்



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்துமருது பிரதேச செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் திருகோணமலை கிளையின் அனுசரணையுடன் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான சவக்காரம், சலவைத்தூள், Hand Wash, Sanitaizer போன்ற உற்பத்திஒ பொருள்களை உயர்ந்த தரத்தில் உற்பத்தி செய்வதற்கான 03 நாள் பயிற்சி செயலமர்வு சாய்ந்தமருதுபிரதேசசெயலகசிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையில் சாய்ந்தமருது விதாதா வள நிலையத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் இலங்கை மத்திய வங்கி யின் திருகோணமலை கிளை முகாமையாளர் செல்வம் பிரசாந்த், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் உதவி பணிப்பாளர் ஐ.எம். நாசர், பிரதேச செயலக விஞ்ஞானதொழிநுட்பஉத்தியோகத்தர்யு.எம். முஸம்மில் ஆகியோரும் வளவாள ராசவெளிக்கள ஒருங்கிணைப் பாளர் ஏ.டவலியு.எம்.ஜெமீரும் கலந்து கொண்டனர்.

# ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் 22 ஆவது நினைவேந்தல் மட்டக்களப்பில்!








படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் 22 ஆவது நினைவேந்தல் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபில் நேற்று (புதன்கிழமை) ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டு அன்னாரின் திருவுருவ படத்திற்கு சுடர் ஏற்றி உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய தலைவர் பா.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தலில் ஊடகவியலாளர்கள், முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவான்,மட் டக்களப்பு சர்வமத நல்லினக்கத்தின் செயலாளர் வண.பிதா ஜேசுதாஸ் மற்றும் மனித நேய அமைப்புக்களை சோந்தவர்கள் கலந்து கொண்டு படுகொலை செய்யப்பட்ட ம.நிமலராஜன் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தினர்.

## 17 வயதுடைய மகனை திருத்தித்தருமாறு கோப்பாய் பொலிஸில் ஒப்படைத்த தாய்!

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடும்பிராய் மேற்கு பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞன் ஒருவரை அவருடைய தாயார் தனது மகனை திருத்தித் தருமாறு கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் நேற்று (புதன்கிழமை) காலை ஒப்படைத்துள்ளார்.

ஒப்படைக்கப்பட்ட இளைஞன் க.பொ.த. சாதாரண பரீட்சைக்கு தோற்றிய பின் வீட்டில் இருக்கிறார் எனவும் கடந்த 2 வருடங்களுக்கு மேலாக போதை பொருள் பாவனையில் ஈடுபட்டு வருவதன் காரணமாக நேரத்துக்கு ஒழுங்காக சாப்பிடுவதில்லை. இரவில் தூக்கமின்மை போன்ற பல இடர்பாடுகளுக்குமுகம்கொடுத்து வருகிறார் எனவும் தாய் தெரிவித்துள்ளார்.

தனது மகனின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்த தாய் தனது மகனை நேற்று கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் திருத்தி தருமாறு ஒப்படைத்துள்ளார்.

பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட குறித்த இளைஞன் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட உள்ளார் எனக் கோப்பாய் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சங்கானையில் தொடரும் வழிப்பறி கொள்ளைகள்!



வீதியால்சென்றமுதியவர்ஒருவரைவழிமறித்த இரு வழிப்பறி கொள்ளையர்கள் , அந்த முதியவரை கத்தியால் வெட்டி படுகாயம் ஏற்படுத்தி விட்டு , முதியவரின் ஒன்றரை பவுண் சங்கிலி மற்றும் 15 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை கொள்ளையடித்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் தப்பி சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் சங்கானை பகுதியில் செவ்வாய்க்கிழமை இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த முதியவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார்சம்பவம்தொடர்பில்விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


மேற்படி பகுதியில் வழிப்பறி கொள்ளைகள் அதிகரித்து காணப்படுகின்றன. கடந்த வாரம் சங்கானை பிரதேச செயலக பெண் அபிவிருத்தி உத்தியோகஸ்தர் கடமை முடித்து வீடு திரும்பும் போது , மோட்டார் சைக்கிளில் வந்த வழிப்பறி கொள்ளையர்கள் பெண்ணின் சங்கிலி மற்றும் கைப்பை என்பவற்றை கொள்ளையடித்து சென்றிருந்தனர்.

அதேபோல வங்கியில் பணம் எடுத்து விட்டு வீடு நோக்கி சென்ற முதியவரை பகுதியில் வழிமறித்து, மோட்டார் சைக்கிளில்வந்தஇருவர்வழிப்பறிகொள்ளையடித்துள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள வீடொன்றில் , வீட்டார் வெளியே சென்ற நிலையில் வீட்டில் தனியே இருந்த மூதாட்டியிடம் தம்மை பொலிஸார் என அறிமுகம் செய்து கொண்டு வீட்டினுள் புகுந்த மூன்று கொள்ளையர்கள் மூதாட்டியின் சங்கிலியை அறுத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பி சென்று இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் நூறாவது ஆண்டு நிறைவு நடைபவனி








(ஹஸ்பர்)

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனி கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதாயஹம்பத்தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது. இந் நிகழ்வு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வரவேற்பு மற்றும் வாகன ஊர்வலத்துடன் சிறப்பாக இடம் பெற்றது. ஊர்வலம் தபாலக வீதி ஊடாக உட்துறைமுகவீதியை ஊடறுத்து பாடசாலையை மீண்டும் சென்றடைந்தது.

இந்நிகழ்வில் மாகாண கல்வித் திணைக்கள பணிப்பாளர் என்.பிள்ளைநாயகம், திருகோணமலை மாவட்ட செயலாளர் பி.எச்.என்.ஜயவிக்ரம, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க,கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ. திசநாயக்க, திரு கோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் .எஸ்.ஸ்ரீதரன், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர், பெற்றார்கள் நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## புலம்பெயர்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை உப குழு ஒன்று அமைக் கப்படுகின்றது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் குற்றம் சாட்டினார்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவி யலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 22 ஆவது நினைவேந்தல் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள படு கொலை செய்யப்பட்ட ஊடகவிய லாளர்களுக்கான நினைவுத் தூபியில் நேற்று (19) இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண் டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரி வித்ததாவது:-

மயில்வாகனம் நிமலராஜன் சர் வதேச மற்றும் உள்ளூர் ஊடகவியலா ளராக இருந்து உண்மைகளை வெளிக் கொண்டு வந்ததன் காரணமாகப் படுகொலை செய்யப்பட்டார்.

1985ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதி அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஊடகவியலாள் க.தேவராஜா, அம்பாறை - கொண்டைவெட்டுவான் படை முகாமில் வைத்து முதலாவதாக வேட்டு வைக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் ஊடகவியலாளர்கள் 37 பேரும், சிங்கள ஊடகவியலாளர்கள் 8 பேரும், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் 2 பேரு மாக 47 ஊடகவியலாளர்களை இந்த நாட்டில் தொடர்ச்சியாக மாறி மாறி ஆட்சி செய்த ஆட்சியாளர்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆட்சி செய்த ஜனாதிபதி யாராக இருந்தாலும் அதற்கான நீதி கிடைக் கவில்லை. அதனால் சர்வதேசத்தின் ஊடாக பல ஊடக அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்கள் ஜெனிவாவில் நீதி கேட்டும் அது கிடைக்கவில்லை என்பது கவலைக்குரிய விடயம்.

இப்போது புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க வந்துள்ளார். இவர் சாதாரண ஒரு வேட்பாளராக இருந்து கடந்த நாடாளுமன்றத் தேர்த லில் போட்டியிட்டு மக்கள் ஆணையைப் பெற முடியாது தோல்வியுற்று அதன் பின்னர் தேசியப்பட்டியில் உள் நுழைந்து இன்று மாபெரும் அதிஷ்டம் கிடைத்த ஜனாதிபதியாக இருக்கின்றார்.

உண்மையிலேயே அவரின் காலத்தில் கூட பல ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று அவருக்குத் தெரியும்.

பொருளாதாரம் இல்லாது நாடு வங்குரோத்து நிலையில் உள்ளது. இந்தநிலையில், பொருளாதாரத்தை மீட்டெடுக்க அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார் ரணில்.

அதேவேளை, தமிழ் மக்களின் பிரச் சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக ரணில் தலைமையில் அமைச்சரவை உப குழு நியமிக்க அமைச்சரவை அனு மதி வழங்கியுள்ளது. இது வேடிக் கைக்குரியது - என்றார்.

## தீபாவளி.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரம் அல்லது 10 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் முற்பணம் தருவதாக இன்று அறிவித்ததை அடுத்து இந்தத் தோட்டங்களைச் சேர்ந்த 150 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தொழிற்சா லைக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் இரண்டு மணி நேரம் போராட்டத்தில் ஈடுப்பட்டதோடு, மீண்டும் தொழிலுக்குச் செல்லாமல் தொழிலாளர்கள் வீடுகளுக்குத் திரும்பினர்.

## கிளிநொச்சியில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற கூட்டத்தில் கருத்துரைத்த போதே அவர் இதனைக் கூறினார்.

அத்துடன், 5 வயதுக்கு உட்பட்ட 576 சிறார்கள் ஊட்டச்சத்துக் குறை பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், 784 கர்ப்பிணித் தாய்மார்கள் வறுமை யால் பாதிக்கப்படுள்ளனர் என்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622







இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.10.2022இல் வெளியிடப்பெற்றது.